செ. கு. எண்: 192 நாள்: 03.11.2018

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 3.11.2018**

தமிழ்நாட்டில் கூட்டுறவு கடன் நிறுவனங்கள் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை எய்தும் வகையில் நியாயமான வட்டி விகிதத்தில் கடன் மற்றும் வங்கிச் சேவைகளை பொது மக்களுக்கு வழங்கி வருவதுடன், விவசாயிகளுக்குத் தேவையான பயிர்க் கடன், முதலீட்டுக் கடன் மற்றும் இடுபொருள்களை வழங்கி மாநிலத்தின் விவசாய உற்பத்தியை பெருக்குவதிலும், பொதுவிநியோகத் திட்டத்தின் மூலம் அத்தியாவசிய பொருட்களை பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதிலும் பெரும்பங்கு ஆற்றி வருகின்றன.

113 ஆண்டுகள் பாராம்பரியமிக்க தமிழ்நாடு கூட்டுறவு நிறுவனங்கள், கடந்த 7 ஆண்டுகளில் தொடக்க நிலை சங்கம் முதல் மாநில சங்கங்கள் வரை அனைத்து நிலைகளிலும் அனைத்து வகைகளிலும் சிறப்பாக செயல்பட்டு, அகில இந்திய அளவில் பல விருதுகள் பெற்று சாதனை புரிந்துள்ளன. கூட்டுறவு கடன் நிறுவனங்களின் சேவைகளை மேம்படுத்திடும் வகையில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்கள் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கணினிமயமாக்கப்பட்டு சிறந்த சேவையினை மக்களுக்கு வழங்கி, அவர்களின் நன்மதிப்பை பெற்ற காரணத்தினால், **31.03.2011** அன்று **26,245** கோடியே **17** லட்சம் ரூபாயாக இருந்த வைப்பீடுகள் **30.09.2018** அன்று **53,313** கோடியே 8 லட்ச ரூபாயாகவும், கடன் வழங்கல் **1,03,371** கோடியே **27** லட்சத்திலிருந்து **3,03,432** கோடியே **27** லட்ச ரூபாயாக உயர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

மேற்படி கூட்டுறவு கடன் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் தங்களுக்கான ஊதிய உயர்வு ஒப்பந்தக் காலம் முடிவுற்றதால், ஊதிய விகிதத்தை திருத்தியமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தனர். இவர்களது கோரிக்கையை ஏற்று, புதிய ஊதிய விகிதங்களை பரிந்துரை செய்ய ஏதுவாக கூட்டுறவுத் துறை அலுவலர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்க ஆணையிடப்பட்டது.

இந்தக் குழுக்கள் தற்போது தங்களது பரிந்துரைகளை அளித்துள்ளன. மேலும், தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மேலாண்மை இயக்குநர்களும், இவ்வங்கிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு புதிய ஊதிய விகிதத்தினை நிர்ணயம் செய்ய பரிந்துரை செய்துள்ளனர். இப்பரிந்துரைகளின் அடிப்படையில் பின்வரும் கூட்டுறவு கடன் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வினை வழங்க ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | எந்த தேதி முதல் நிலுவைத் தொகை வழங்கப்படும் | பயன்பெறும் பணியாளர்கள் | மாதமொன்றுக்கு குறைந்தபட்ச/ அதிகபட்ச பயன் (ரூ.) | | அதிகபட்ச ஊதிய உயர்வு சதவிகிதம் | ஓராண்டுக்கான கூடுதல் செலவு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் | 01.04.2018 முதல் | 13,140 | 988 | 4,613 | 20% | 61.72 |
| 2 | மத்தியக் கூட்டுறவு வங்கிகள் | 01.01.2016 முதல் | 4,767 | 1,114 | 16,963 | 20% | 53.00 |
| 3 | நகரக் கூட்டுறவு வங்கிகள் | 01.01.2017 முதல் | 1,286 | 455 | 16,485 | 20% | 5.40 |
| 4 | பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் | 01.07.2018 முதல் | 1,378 | 3,200 | 12,500 | 2.57மடங்கு ஊதிய உயர்வு | 9.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள் | 01.07.2018 முதல் | 462 | 2,500 | 18,000 | 2.70 மடங்கு ஊதிய உயர்வு | 0.42 |
| 6 | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | 01.01.2016 முதல் | 485 | 1,189 | 7,815 | 20% | 1.86 |
| 7 | தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி | 01.01.2017 முதல் | 117 | 2,521 | 15,526 | 15% | 2.32 |
| 8 | தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி | 01.01.2016 முதல் | 413 | 3,456 | 28,017 | 21% | 10.00 |

**அனைத்து கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் வங்கிகளிலும் பணியாளர்களுக்கான இந்த ஊதிய உயர்வு சட்ட நடைமுறைகளின்படி வழங்கப்படும். இந்த ஊதிய உயர்வால் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் 22,048 பணியாளர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.143.72 கோடி ஆகும்.**

**தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கைகள் கூட்டுறவு பணியை மேற்கொள்ளும் பணியாளர்களின் வாழ்வு மேம்பட்டு சிறக்க வழிவகுக்கும்.**

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**